2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

265—

வலை பின்னும் கூடம்

***20689—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், தாண்டவராயன் சோழன்பேட்டை பகுதியில் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், தாண்டவராயன் சோழன்பேட்டை பகுதியில் 181 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 713 மீனவ மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் 245 கட்டுமரங்கள் மற்றும் தோணிகள் மற்றும் 26 பைபர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், தாண்டவராயன் சோழன்பேட்டை பகுதி மீனவர்கள், மிக அருகிலுள்ள முடசலோடை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளம் மற்றும் மீன் வலை பின்னும் கூடத்தினைப் பயன்படுத்தி வருவதால், இக்கிராமத்திற்கு தனியாக மீன் இறங்குதளம் அமைத்திடும் நிலை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானுடம் போற்றிய எங்கள் மகா சக்தியே, ஆற்றலில்*

தந்தை பெரியாரின் பேருருவாய், அறிவில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவாய், ஈகையில் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரின் திருவுருவாய், நமக்குக் கிடைத்திட்ட திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தலைவியே, இந்தத் தமிழ் மண்ணில் இறை சக்தியாய் வாழ்ந்து, சரித்திர சாதனைகள் படைத்திட்ட எங்கள் குலதெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திருவிடம் நோக்கி, இருகரம் கூப்பி, தலை தாழ்த்தி வணங்குகிறேன்.

சூழ்ச்சிகள் பல வந்தாலும் அவை அனைத்தையும் தூள், தூளாக்குகின்ற துணிச்சல்மிக்க எங்களுடைய தலைவர், கொங்குசீமை தந்த எங்களின் கொள்கை சீமான், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு கரம் கோர்த்து பணியாற்றும் தமிழக துணை முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியம், தாண்டவராயன் சோழன்பேட்டையில் சுமார் 250–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்றன. இவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வரும்போது சேதமடைகின்ற வலைகளைச் சரி செய்வதற்கும், வலைகளைப் பின்னுவதற்கும் கடற்கரைப் பகுதியையே பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் மழைக் காலங்களில் இயற்கைச் சீற்றம் ஏற்படும்போது, வலைகளைப் பின்னுவதற்கு வலைப் பின்னும் கூடம் அமைந்துள்ள முடசலோடைக்கு கடல் மார்க்கமாக 9 கிலோ மீட்டர் தூரமும், சாலை மார்க்கமாக 15 கிலோ மீட்டர் தூரமும் செல்ல வேண்டியிருப்பதால் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், கொஞ்சம் வேகமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: எனவே, தாண்டவராயன் சோழன்பேட்டை. மீனவக் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இப்பகுதியில் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் இறங்குதளம் ஆகியவற்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய தாண்டவராயன் சோழன்பேட்டை பகுதியிலிருந்து முடசலோடை கிராமத்திற்குச் செல்வதற்கு 8 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கின்றது. எனவே, நம்முடைய மீனவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், தற்போதே 245 கட்டுமரங்கள் மற்றும் 213 மீனவ கிராமங்கள் இருக்கின்ற நிலையிலே, எதிர்காலத்தில் கட்டுமரங்களினுடைய எண்ணிக்கை இன்னமும் கூடுகின்ற நிலை வரும்போது, அந்த இடத்திலே மீன்பிடி இறங்குதளம் மற்றும் மீன் வலை பின்னும் கூடம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அந்த இடத்திலே ஒரு சிறிய மீன் இறங்குதளமும், அதனோடு வலை பின்னும் கூடமும் அமைப்பதற்கு அரசு உரிய பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிதம்பரம் தொகுதியில் அன்னக்கோயிலில் ரூ.19 கோடியிலும், சாமியார்பேட்டையில் ரூ.2.5 கோடியிலும், முடசலோடையில் 7 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவிலும், எம்.ஜி.ஆர். திட்டில் 3 கோடி ரூபாய் செலவிலும் மீன்பிடி இறங்குதளங்கள் அமைக்கப்பட்டு, அவை எல்லாம் பயன்பாட்டில் இருக்கின்றன. அதேபோன்று, உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் வெள்ளாறு முகத்துவாரம் தூர் வாரும் பணியும் 4.75 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றது. இது தவிர, அவருடைய மாவட்டத்தில், கடலூர் முதுநகரில் உள்ள மீன்பிடி துறைமுகம் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பினை வெளியிட்டிருக்கின்றார்கள். அந்தப் பணியும் விரைவாக துவக்கப்படும். எனவே வருகின்ற காலத்தில், அங்குள்ள மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை உள்ளிட்ட இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு நிச்சயமாக அங்கே ஒரு சிறிய மீன்பிடி இறங்குதளமும், அத்துடன் சேர்த்து மீன் வலை பின்னும் கூடமும் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதி, கிள்ளை பேரூராட்சியில் உள்ள சின்னவாய்க்கால் முகத்துவாரத்தில் கடல் பகுதியில் காணப்படும் மணல்மேடுகளால் சிறிய வகைப் படகுகள் மற்றும் பெரிய வகைப் படகுகளைச் செலுத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லாததால், இப்பகுதியில் உள்ள பில்லுமேடு, சின்னவாய்க்கால், எம்.ஜி.ஆர். திட்டு போன்ற 10–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, சின்னவாய்க்கால் முகத்துவாரத்தினை ஆழப்படுத்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக முகத்துவாரங்கள் ஆழப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கையும்கூட. முகத்துவாரங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்துவதன்மூலம்தான் மீன் இனப் பெருக்கமும், கடல் அரிப்பைத் தடுக்கின்ற நிலையும், கட்டுமரங்கள், மீன்பிடிக் கலன்கள் எல்லாம் எளிதில் முகத்துவாரம் வழியாகக் கடலுக்குச் செல்கின்ற நிலையும் ஏற்படும். அரசு இதனை உணர்ந்த காரணத்தினால்தான், முடிந்த அளவுக்கு மாநில நிதியைக்கொண்டு ஒவ்வோர் ஆண்டும், மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் மீனவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, முகத்துவாரங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, வாய்க்காலில் கடல் நீர் உள்ளே செல்கின்ற வகையில் ஏற்பாட்டைச் செய்கின்றோம். அந்த அடிப்படையில்தான், இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினருடைய சிதம்பரம் தொகுதியில் உள்ள வெள்ளாறு முகத்துவாரத்தைத் தூர் வாரும் பணி 4.75 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த வாய்க்கால்களையும்,* estuaries *என்று சொல்லக்கூடிய முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், ஆயிரம் கோடி*

2018 ஜுலை 4]

ரூபாய்க்குமேல் நிச்சயமாக செலவாகும். மாநில அரசு தன்னுடைய நிதியைக்கொண்டுதான் ஒவ்வோர் ஆண்டும் செலவு செய்ய முடியும். எனவே, முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்காக ஆயிரம் கோடி ரூபாயை யாரும் ஒரே ஆண்டில் செலவு செய்ய முடியாது. எனவேதான், Green Climate Fund *என்று சொல்லக்கூடிய பசுமை நிதிக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்து,* concrete proposal *ஒன்று மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே 2, 3 ஆண்டுகளில் நிச்சயமாக எல்லா முகத்துவாரங்களும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தப்படும். கடல் அரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கும், மீன் இன விருத்தி ஏற்படுவதற்கும் ஒரு வடிகாலாக வாய்க்கால்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

266—

கால்நடை மருத்துவமனை

***12639—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஜீனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜீனூர் கிராமத்தில் 3,156 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஜீனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் 2 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் 29–3–2018 அன்று புதியதாக தோற்றுவிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு